**செய்தி வெளியீடு எண்: 289** **நாள்: 29.04.2018**

# தமிழ் வளர்ச்சித் துறை

## தமிழ்க் கவிஞர் நாள் – 29.04.2018

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் தமிழ்த் தொண்டைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாளை தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாட தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டு பாவேந்தர் பாரதிதாசனின் 125ஆம் ஆண்டு பிறந்த நாளிலிருந்து தமிழ்க் கவிஞர் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வகையில் பாவேந்தர் பாரதிதாசனின் 127ஆவது பிறந்தநாளான 29.04.2018 ஆம் நாளான இன்று தமிழ்க் கவிஞர் நாள் விழா சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க.பாண்டியராசன் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தனது சிறப்புரையில் யாழ்ப்பாணத்தில் அமையப்பெற்றிருந்த பெரிய நூலகம் போன்று மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் தற்போது 6கோடி மதிப்பிலான பெரிய நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது எனவும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் தமிழறியாத பிற மாநில மக்களுக்கும் தமிழைப் பயிற்றுவிக்கும் நோக்கில் தமிழ் வளர்மையம் ஏற்படுத்தப்படும் என்றும், இசை, நடனம், சிற்பக்கலை ஆகியவற்றை உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு தமிழ்ப் பண்பாட்டு மையம் மூலம் கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், தெரிவித்து 2015 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலாகத் தெரிவுச்செய்யப்பட்ட நூலாசிரியர்களுக்கும், அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தார்களுக்கும் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றுகளும் வழங்கி சிறப்புச் செய்தார். முன்னதாக இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் வரவேற்புரையும் நிகழ்த்தினர். இவ்விழாவில் முனைவர் வி.ஜி. சந்தோசம், உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் முனைவர் கா.மு. சேகர், அகரமுதலித் திட்ட இயக்குநர் முனைவர் கோ. செழியன், சென்னைப்பல்கலைக் கழக தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஒப்பிலா மதிவாணன், கலைப்பண்பாட்டுத் துறை இணை இயக்குநர் முனைவர் இரா. குணசேகரன், திரு. ஆவடி குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் தேனிசைச் செல்லப்பா அவர்களின் தமிழிசையும், மயூரி குழுவினரின் தமிழிசை ஆடலரங்கமும்

‘புதுச்சேரி பூகம்பம்’ எனும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் உலகநாயகி பழனி அவர்களின் தனியுரையும் இடம்பெற்றன. பிற்பகல் நிகழ்வாக இளயோர் திலகம் திரு. பால சீனிவாசன் அவர்களின் தலைமையிலான பட்டிமன்றத்தில் புரட்சிக் கவிஞரின் படைப்புகளில் விஞ்சியிருப்பது சமூக உணர்வா ? மொழியுணர்வா ? என்ற தலைப்பில் நடைப்பெற்றது. இப்பட்டிமன்றத்தில் சமூக உணர்வே என்ற தலைப்பில் திரு. பழ.பாசுகரன், செல்வன் வே.து. வெற்றிச்செல்வன், திருமதி ர.ரேகா, செல்வி கா.ரோசலின் அனிசா ஆகியோரும், மொழியுணர்வே என்ற தலைப்பில், கவிஞர் கோ.மணி, செல்வன் மு. இராசகுமார் செல்வன் த.முனீசுவரன், செல்வி தீன்சா நூஃபா ஆகியோரும் கருத்துகளை வழங்கினர் அதனைத் தொடர்ந்து கவிஞர் முனைவர் பால. இரமணி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் ‘மாண்புகள் நீயே’ என்ற தலைப்பில் கவிஞர் ஏர்வாடி இராதாகிருட்டினன், ‘வீரனின் வீரமும் நீயே’ என்ற தலைப்பில் கவிஞர் பாரதி சுகுமாரன், ‘செயல் செய்வாய், தமிழுக்கு !’ என்ற தலைப்பில் கவிஞர் துரை. இராசமாணிக்கம், ‘எழுக நீ புலவ...!’ என்ற தலைப்பில் கவிஞர் முனைவர் ஈ.விசய், ‘ஊழியஞ்செய், தமிழுக்கு !’ என்ற தலைப்பில் கவிதாயினி தர்சிணி மாயா, ‘மொழியின்றேல் நாம் யாரோ ?’ என்ற தலைப்பில் கவிஞர் சிந்தை வாசன், ஆகியோர் கவிபாடினர். நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் (நிருவாகம்) திரு. ம.சி. தியாகராசன் அவர்கள் நன்றியுரை வழங்கி நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**